**இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் - 2023**

------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ("பணியகம்") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து பணியகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, வெளிநாட்டு நாணயக் கணக்கு மீதி ரூபா.110,434,523 ஆகவிருந்தது. எனினும், வெளிநாட்டு முன்னைய ஆண்டிற்கான கொள்கைப்பிரகாரம் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணயமாற்று வீதத்தை கருத்திற்கொள்ளும்போது இது ரூபா.108,817,399 ஆகவிருந்திருக்க வேண்டும். ஆகையால், இது ரூபா.1,617,124 வித்தியாசத்தைக் காட்டுகின்றது. மேலும். பிரயோகிக்கப்பட்ட மாற்றுவிகிதம் தொடர்பாக எந்தவொரு கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வங்கியானது வெளிநாட்டு பற்றுச்சீட்டுக்களிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது விற்பனை விகித்தை பயன்படுத்துவதுடன் உள்நாட்டு நாணயத்திற்கான மாற்றலானது கொள்வனவு விகிதத்தை அடிப்படையாகக்கொள்ளும். அதற்கிணங்க, வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள மீதி மதிப்பிடப்படுவதுடன் 2023 திசெம்பர் 29 இல் உள்ளவாறான உடனடி விகிதமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. | நாணயமாற்று விகிதம் தொடர்பான கொள்கையை வெளிப்படுத்துவதற்கும் அதனைப் பிரயோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இந்தியாவிற்குச் செலுத்தவேண்டியவையாக காட்டப்பட்டிருந்த ரூபா6,866,554 தொகையானது வெளிநாட்டு | வெளிநாட்டு அமைச்சால் திருப்பியனுப்பப்பட்ட நிதியங்களின் திருப்பங்கள் தொடர்பில் விபரங்கள் | வேறுபட்ட கணக்குகளின் மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சால் விபரங்களில்லாமல் மொத்தமாக தீர்ப்பனவுகளை சமர்ப்பித்தமையால் வெளிநாட்டு முற்பண கணக்கிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் கணக்கானது பொறுப்புக்கணக்கிளை தீர்ப்பனவு செய்திருந்தமையால் இந்தியாவிற்குச் செலுத்தவேண்டிய கணக்குமீதி மற்றும் வெளிநாட்டு முற்பண கணக்கு மீதி சொல்லப்பட்ட தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிந்தது. | சமர்ப்பிக்கப்படாமையால் நாங்கள் சொல்லப்பட்ட தொகையினை வெளிநாட்டு அமைச்சிடமிருந்தான கடனாக மொத்த முற்பணத்திலிருந்து சொல்லப்பட்ட தொகைகளுக்கு எதிராக தீர்ப்பனவு செய்திருந்தோம். | |
| (இ) | கணக்காய்வுக் கணிப்பீட்டின் பிரகாரம் வருடத்திற்கான சரியான நிலையான வைப்பு வட்டி ரூபா 1,283,462,464 ஆகவிருந்தபோதும் இது ரூபா 1,274,245,046 ஆக இனங்காணப்பட்டிருந்ததுடன் இதனால் ரூபா 9,217,418 வித்தியாசமிருந்தது. மேலும். கணக்காய்வுக் கணிப்பீட்டின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி பெறவேண்டியவை ரூபா.340,742,327 இருந்ததுடன் இது ரூபா.4,773,463 குறைவுடன் ரூபா.335,968,864 ஆக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | குறித்த காலப்பகுதிக்கான வட்டியினை கணிப்பிடும் போது நாங்கள் 364 நாட்களைப் பயன்படுத்தி கணிப்பிட்டிருந்தோம். எனினும், இலங்கை வங்கியானது 365 நாட்களைப் பயன்படுத்தியும் தேசிய சேமிப்பு வங்கியானது 364 நாட்களைப் பயன்படுத்தியும் கணிப்பிட்டிருந்தனர் என பின்னர் அறிந்திருந்தோம். ஆகையால், நிலையான வைப்புக்கள் முதிர்வடையும் போது சரியான திருப்பங்களைப் பெறும்போது நாங்கள் சரியான வட்டி வருமானத்தை கணக்குகளிலுள்ளவாறு நாங்கள் சரிசெய்கின்றோம். அதற்கு மேலதிகமாக, 2023 ஆம் ஆண்டிற்கான மொத்த அட்டுறு வருமானத்தின் 1% இனைவிட குறைவாக வித்தியாசமானது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | வட்டி வருமானமானது கணக்குகளில் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | ஆண்டின்போது திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ரூபா.500,000,000 தொகை உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் இனங்காண்பதற்குப் பதிலாக நிதி நிலமைக் கூற்றில் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது. இதனைத் தனியாக காசுப்பாய்ச்சல்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியானது 2023 ஆம் ஆண்டிற்கான வரிப்பங்கினை வேண்டியிருந்தது. ஆகையால், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமானது இதனை கடந்த காலத்தில் செலுத்தியிருந்ததால் 2023 ஆம் ஆண்டிற்கான மிகையிடமிருந்து கொடுப்பனவாக இந்தவரியினை பதிவுசெய்திருந்ததுடன் கடந்த ஆண்டுகளுடன் ஒத்துப்போவதற்குமாக சொல்லப்பட்ட பங்களிப்பான | திறைசேரி பங்களிப்பானது உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் இனங்காணப்படவேண்டியிருந்ததுடன் காசுப்பாய்ச்சல்க்கூற்றில் தனியாக காட்டப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ரூபா.500,000,000 நிதிநிலைமைக்கூற்றின் கீழ் பதிவு செய்திருந்தது. | |
| (உ) பணியகத்தால் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு கொடுக்கப்பட்ட முற்பணங்களிலிருந்து ரூபா 1,608,302 மிகுதித் தொகை 2018 – 2020 காலப்பகுதியின் போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் தூதரகங்களிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் இது பொதுத்திறைசேரிக்கு நேரடியாக திருப்பப்பட்டிருந்தது. எனினும், அத்தகைய மீதிகள் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கொடுக்க வேண்டியவையாகவிருந்தது. | பல ஞாபகப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு அமைச்சானது தொகைகளை திருப்பியனிப்பியிருக்கவில்லை. பொதுத் திறைசேரிக்கு நிதியங்கள் திருப்பியனுப்பட்டிருந்தமையால் அதனைப் பதிவழிப்பதற்கான ஏதேனும் சாத்தியமுள்ளதா என கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்திடமிருந்து ஆலோசனையைப் பெறுவோம். | பொதுத் திறைசேரியிடமிருந்து ஆலோசனையைப் பெற்ற பின்னர் முறையான செய்முறையை பின்பற்றுவதன் மூலம் கணக்குகளிலிருந்து பெற வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிக்காக வெளிநாட்டுத் தூதரகங்களிடமிருந்து பெறவேண்டியிருந்து ரூபா 2,320,040 மீதி மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெறவேண்டிய ரூபா.967,738 தொகையொன்று 3 தொடக்கம் 5 வருடங்கள் காலப்பகுதியிலான வீச்சிலிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கியிருந்ததுடன் வெளிநாட்டு அமைச்சிடமிருந்து பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதனை தொடர்ச்சியாக கவனத்திற்கொள்கின்றோம். | இந்தத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 07 முதல் 13 வருட காலப்பகுதிக்கான ரூபா 11,521,809 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன்கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாமல் இருந்தன. | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை நேரத்திற்குச் செலுத்தாமையானது பணியகமான அதனை தீர்ப்பனவு செய்யாமைக்கான காரணமாகவிருந்தது. நாங்கள் எங்களுடைய கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிடமிருந்து வழிகாட்டல்களை பெறுவதுடன் அது முகாமைத்துவசபையால் பின்பற்றப்படும். | இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 05 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்கான நிலுவையாகவுள்ள ரூபா.677,930 மற்றும் ஒரு வருடத்திற்கு மேலாகவுள்ள கூட்டுமொத்தமான நிலுவையாக உள்ள ரூபா.6,257,806 அட்டுறு செலவினங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாமல் இருந்தன. | இந்த ரூபா.677,930 நிலுவை மீதியானது ஐக்கிய இராஜ்ஜியத்தின் வெளிநாட்டுத் தூதரகத்திலுள்ள அலுவலகரிற்குரியதாகவிருப்பதால் பணியகமானது அவருடைய கடைசி மாதச் சம்பளத்தினைச் செலுத்துவதற்கு அனுமதியை இதுவரை பெற்றிருக்கவில்லை. மேலும், மொத்தச்செலவீனம் ரூபா.6,257,806 ஆனது ரூபா. 1,265,870 இற்கு 2024 மே 31 இல் உள்ளவாறு குறைக்கப்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கும் பொறுப்பு பட்டியலிலிருந்து அவற்றை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 45,707,620 கூட்டுமொத்தமான வெளிநாட்டு முற்பணங்கள் தொடர்பில் மிகுதி உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 2023 இல் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் தொடர்பில் வெளிநாட்டு அலுவலல்கள் அமைச்சிடமிருந்து நிரூபித்தல் கடிதம் பெறப்பட்டது. கிடைக்கப்பெற்ற நிரூபித்தல் கடிதத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது திருப்பிச்செலுத்தப்பட்ட பெறுமதியாக ரூபா.3,264,261 பெறுமதியிருந்தது. | வெளிநாட்டு அலுவலல்கள் அமைச்சுடன் முற்பணங்களை இணக்கஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பந்தியின் 09 ஆம் உபபிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் ஆண்டின் செயற்பாடுகள் குறித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | சட்டத்துடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான கூட்டிணைந்த நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் 2.3 ஆம் பந்தி. | 2020-2023 ஆம் நான்காண்டு காலப்பகுதிக்கான தந்திரோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஐந்து வருட காலப்பகுதிக்கான தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது ஒவ்வொரு வருடமும் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (இ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் 6.6 ஆம் பந்தி | 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டறிக்கை பட்டியலிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,492,042,780 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,442,010,989 ஆக காணப்பட்டது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 1,050,031,791 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 1,318,778,832 ஆல் அதிகரித்தமை, சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 604,418,231 ஆல் அதிகரித்தமை மற்றும் முதலீட்டின் மீதான வட்டி வருமானம் ரூபா 582,237,191 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா.1,760,268,107 மொத்தச் செலவினத்தின் 90 சதவீதம் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிற்காக செலவழிக்கப்பட்ட போதும் முக்கிய விடயங்களை இனங்காண்பதற்கு சந்தைப்படுத்தல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது வருடாந்த ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் பணியகமானது தனியான சந்தைப்படுத்தல் திட்டத்தை தயாரிக்கவில்லை. | தனியான சந்தைப்படுத்தல் திட்டம் பணியகத்தால் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூலையில் இடம்பெற்ற ராய் (TAAI) மாநாட்டிற்காக ரூபா 10,120,000 கிரயத்தில் அச்சிடப்பட்ட ‘‘இலங்கைக்கு விஜயம் செய்க’’ என பெயரிடப்பட்ட 500 | கொடிகளானது வரையறுக்கப்பட்ட எம்/எஸ் சலசினே லிமிட்டட் கம்பனியிடமிருந்து திணைக்கள குழுத் தீர்மானத்தினூடாக | வேறுபாடுகளிற்காக முன் அனுமதி பெறப்பட வேண்டியதுடன் தற்போதுள்ள |

| | | |
|---|---|---|
| கொடிகளிற்காக எந்தவித பெறுகைச் செயன்முறையோ அல்லது சபை அனுமதியோ மற்றும் தலைவரின் அங்கீகாரத்தின் கீழோ பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், தரம் மற்றும் குறிப்புரைகள் பேணப்பட்டிருக்காததுடன் திருப்திகரமான அறிக்கை குறித்த திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு கொடிக்கு வற் இல்லாமல் ரூபா.17,600 ஆகவிருந்ததுடன் இது மதிப்பீட்டை விட அதிகமாகவிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்டது என உறுதிப்படுத்த விரும்புகின்றோம். கொடிகளுக்கான கொடுப்பனவு அளவு வேறுபாட்டை சரிசெய்த பின்னரும், விலை பேச்சுவார்த்தைக்குப் பின்னரும் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டது. | வழிகாட்டல்களுடன் இணங்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜேர்மனி மற்றும் சீனாவில் 2023 இல் இடம்பெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியவர்களுக்காக விமானச்சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது குறித்த நேரத்தில் பெறுகைச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் விலைமனு அழைப்பிற்காக குறைவான நேரம் கொடுக்கப்பட்டமை மற்றும் மதிப்பீட்டை விஞ்சி அனுமதி பெறாமல் கொடுப்பனவு மேற்கொண்டமை சமரசங்கள் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் பொருளாதாரப் பிரச்சனையால் இறுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை முடிவுறுத்தல் மற்றும் அனுமதியைப் பெற காலதாமதம் ஏற்பட்டமை காரணமாகவிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் (செயற்பாடுகள்), பணிப்பாளர் (புதுமையான அபிவிருத்தி), பணிப்பாளர் (ஊக்குவிப்பு), 02 உதவி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), உதவி பணிப்பாளர் (எஸ்பிஆர்), உதவிப் பணிப்பாளர் (நிதி), உள்ளக கணக்காய்வாளர் மற்றும் 11 கனிஷ்ட முகாமையாளர்கள் உள்ளடங்கலான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் 2022 இல் அங்கீகரிக்கப்பட்டது. எனவே, 2023 இல் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர், பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளுக்கான உள்ளக நேர்முகப்பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் கனிஷ்ட முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டது. முகாமைத்துவ சபையானது மீள்நேர்காணலுக்கு பிரேரித்திருந்ததுடன் தற்போது மிள்நேர்காணல்கள் பட்டியலிடப்பட்டுக்கொண்டிருக்கின்றது. | வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2010 பெப்ரவரி 09 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணியகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஆரம்பத் தகைமைகளை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் பணியகத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சம்பவங்கள் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆட்சேர்ப்பின் போது அங்கீகரிக்கப்பட்ட ளுழுசுள இற்கு ஏற்ப தகைமைகள் உரிய நேர்முகப்பரீட்சை குழுக்களால் பரிசீலிக்கப்படுகின்றன. இதனால் 2009 இல் அங்கீகரிக்கப்பட்ட எஸ்ஓஆர் இன் பிரகாரமான தகைமைகளுக்கு ஏற்ப உத்தியோகத்தர்கள் தகைமைகளைக் கொண்டிருந்தால் அவர்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தனர். எனினும், எஸ்ஓஆர் இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் நேரடியாகப் பொருந்தாத சமீபத்திய ஆட்சேர்ப்புக்கள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ஆட்சேர்ப்புக்களும் பதவி உயர்வுகளும் அங்கீகரிக்கப்பட்ட எஸ்ஓஆர் ஐ பின்பற்ற வேண்டும். |
| (இ) | குறித்த திகதியில் நிரந்தரப் பதவியணியில் வெற்றிடங்கள் இல்லாதிருப்பதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கிணங்க சபை அனுமதியுடன் 2019 ஒக்தோபர் 10 இல் 18 ஒப்பந்த உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் வரிசை அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதி எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதியினைப் பெற்று அறிவிக்கும் வரை கடமைகளுக்கு சமுகமளிக்க வேண்டாம் என 2020 யூலை 16 இல் அறிவிக்கப்பட்டது. அதற்காக, பணியகத்திற்கு எதிராக அவர்களால் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது ஒப்பந்த அடிப்படை உத்தியோகத்தர்களான முகாமைத்துவ உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்குஅனுமதி வழங்கியிருக்காததுடன் ஊழியர் இணக்க சபையானது நட்டஈட்டுடன் அவர்களை மீள்சேர்ப்பதற்கு கட்டளை வழங்கியிருந்தது. ஆகையால், பணியகமானது மேன்முறையீட்டினை உயர் நீதிமன்றத்தில் ஊழியர் இணக்க சபைக்கு எதிராக தொடுத்திருந்ததுடன் பின்னர் ஊழியர் இணக்க சபையின் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு சார்பாக வழங்கப்பட்ட மேன்முறையீட்டிற்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டிகளுடன் அனைத்து நியமனங்களும் இணங்க வேண்டும். |